1987 மே 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைப் போட்டது பற்றி நான் பதில் சொல்வதற்கில்லை. கேள்வி கேட்கிறார்கள். ஆனால் நார்த்தம்பட்டியிலேயே ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி துவக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கோவை மாவட்டம், வாலங்குளம் பகுதியிலுள்ள குடிசைவாசிகள்.

616—(*வினா எண். 8224) திரு. ஆ. நடராசன், திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், வாலங்குளம் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் தற்போது எங்கே குடியமர்த்தப்பட்டு உள்ளார்கள் ?

(ஆ) எத்தனைக் குடும்பங்கள் இவ்வாறு மாற்றப்பட்டன ?

(இ) அவர்களுக்கு அரசு அளித்துள்ள நிவாரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோவை மாநகரம், வாலங்குளம் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் கோயமுத்தூர் வட்டம், மதுக்கரை அருகாமையில் கருணாபுரம் என்னுமிடத்தில் தற்போது குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) 477 குடும்பங்கள் அவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளன.

(இ) ஆக்கிரமிப்புதாரர்கள் வெளியேற்றம் செய்து கருணாபுரத்தில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களது குடியமர்த்தும் மறுவாழ்விற்காக ஒரு குடிசைக்கு ரூ. 500 வீதம் 477 குடிசைகளுக்கு மொத்தமாக ரூ. 2,38,500 சேரன் போக்குவரத்துக் கழகத்தினரால் வழங்கப்பட்டது. ரூ. 15,000 செலவில் ஆழ் நீர் குடிதண்ணீர் குழாயும் அமைத்து தரப்பட்டது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடியமர்த்தப்பட்ட குடிசைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. சேரன் போக்குவரத்துக் கழகப் பணி மனைக்காக

அந்த இடம் எடுத்துக்கொள்ளப்பட்ட காரணத்தால் போக்கு வரத்துக் கழகத்தின் மூலமாக அங்கே இருக்கிற மக்களுக்கு அடிப் படை வசதிகளான பள்ளி, தெருவிளக்குகள், பாதை வசதிகள் போன்றவற்றை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கே அந்த நிலைமை நன்றாகத் தெரியும். மிக மோசமான இடத்தில்—சுகாதாரமே யில்லாத இடத்தில்—அவர்கள் ஏற்கனவே குடியிருந்தார்கள். அந்த இடமேகூட அரசாங்கத்திற்குச் சொந்தமானது. அதைக்கூட ஆக்கிரமிப்பு என்ற வகையில் சேர்த்துக் கொள்ளலாம். அப்படிப் பட்ட இடத்திலிருந்து அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் சேரன் போக்குவரத்துக் கழகம் ஆக்கிரமிப்பை அகற்றி அதை எடுத்துக் கொண்டிருந்தாலும்—அவர்களை யெல்லாம் வீணாக விட்டுவிடக்கூடாது என்று கருதிதான் அவர்களுக்கு ஒரு இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பார்த்து குடிசை ஒன்றுக்கு ரூ. 500 வீதம் செலவுக்கும் கொடுத்து, அங்கே ஆழ்குழாய் கிணறு ஒன்றையும் குடிதண்ணீர் வசதிக்காக செய்து கொடுத்திருக்கிறது. ஏற்கனவே சொன்ன படி சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 2,38,500 செலவழித்தி ருக்கிறது. ஓரளவுக்குப் போதுமான அளவுக்குத்தான் அது செய்து கொடுத்திருக்கிறது. இதற்கு மேலும் அவசியமா என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, வாலாங்குளத்தில் இருந்தவர்களை, சேரன் போக்குவரத்துக் கழகத்திற்காக இடம் தேவைப்படுகிறது என்ற காரணத்திற்காக வெளியேற்றி இருக்கிறார்கள். அப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 500 உதவி கொடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் விலைவாசி இருக்கிற நிலையில் ரூ. 500 எப்படி ஒரு வீடு கட்டுவதற்குப் போதுமான தாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவர்களுக்கு அடிப்படை வசதி செய்து தருவதற்கும் அத்துடன் வீட்டிற்கு அதிகப்படியான தொகை அளிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் முதலிலேயே சொன்னேன். அந்த இடம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம். ஆக்கிர மிப்பு என்ற நிலையில்தான் அது இருந்தது. அவர்களுக்குச் சொந்தமான நிலமில்லை. அதன் காரணமாக அவர்களை ஆக்கிரமிப்பிலிருந்து அரசாங்கம் வெளியேற்றினாலும்கூட முடிந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றுதான் செய்யப்பட்டிருக்கிறது. வாலாங்குளத்திலேயே இருந்திருந்தால் நிரந்தரமாக அவர்களுக்கு என்றைக்குமே ஒரு

தீர்வு கிடைத்திருக்காது. காரணம் அவர்களே அங்கே நல்ல வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாது. மேலும் ஒவ்வொரு முறையும் தண்ணீர் வருகிற போது அவர்கள் எவ்வளவு சிரமப் பட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்கு தெரியும். இன்றைக்கு ஓரளவுக்குச் சுகாதாரமான இடம், ஒரு நிரந்தரமான நல்ல இடம் கிடைக்க, வாய்ப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்கு மேலும் அரசாங்கம் கை கொடுப்பது என்பது சிரமமாக இருக்கும், இப்போதிருக்கிற நிதிப் பிரச்சினை காரணமாக.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டாண்டுக் காலமாக மக்கள் குடியமர்த் தப்பட்டிருக்கிறார்கள். இந்த 2 ஆண்டுக் காலமாகவும் அவர் களுக்கு நிலப்பட்டா வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் தங்களுக்கு என்று சொந்தமான வீடுகட்டிக்கொள்ள இயலவில்லை. சொந்தப் பட்டா இருந்தால்தான் வீட்டு வசதி வாரியம் மூலமாகக் கடன் வாங்க வசதியாக இருக்கும். எனவே அதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பேசி விரைவான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும். இப்படி அவர்களுக்கே கடன் கிடைக்கிற வாய்ப்பு இருப்பதால் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் இது வாய்ப்பாக இருக்கும் என்றுகூட நான் கருதுகிறேன்.

கிண்டி-அம்பத்தூர் பகுதிகளிலுள்ள டெவலப்மெண்ட் பிளாட்டுகள்.

617—(*வினா எண். 9418) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டி-அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சிட்கோவிற்கு சொந்தமான தொழிற்கூட கட்டிடங்களையெல்லாம் சொந்த மாக்கி தந்ததுபோல், டெவலப்மெண்ட் பிளாட்டுகளுக்கு முழுத்தொகை கட்டியவர்களுக்கு விற்பனை பத்திரங்களை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 383, தொழில்துறை, தேதி 19—3—1982-ன் மூலம் அரசிற்குச் சொந்தமான தொழிற்கூட கட்டிடங்களைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் திட்டம் அமு லாக்கப்பட்டது. ஆனால் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவில்லை. இதுகுறித்து அரசு